**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

<u>தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு</u>

**<u>விளையாட்டுத் துறையில் சாதனைப் படைத்த கல்லூரிகளுக்கான இணை மையம் 2016–2017</u>**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருநெல்வேலி பிரிவின் சார்பில், 2016–2017 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுத் துறையில் தேசிய அளவில் சாதனைப் படைத்த (Joint Sports Development Centre) கல்லூரி இணை மைய வீரர், வீராங்கனைகளுக்கு உதவித் தொகை வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின்படி தகுதி வாய்ந்த கல்லூரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கல்லூரிகளில் **விளையாட்டுத் துறையில் 01.06.2015 முதல் 31.05.2016 வரை தடகளம், இறகுபந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, கிரிக்கெட், வாள் சண்டை, கால்பந்து, ஹேண்ட்பால், ஹாக்கி, கபாடி, கோ–கோ, டேபிள் டென்னிஸ், டென்னிஸ், நீச்சல், வாலிபால் மற்றும் பளு தூக்குதல் ஆகிய விளையாட்டுக்களில்** சாதனைப் படைத்த வீரர், வீராங்கனைகளின் சாதனைகளின் அடிப்படையில் உதவித்தொகை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் வழங்கப்படவுள்ளது.

ஆகவே, இது சம்பந்தமான படிவத்தினை 06.04.2017 அன்று முதல் **முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம்,** மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், அண்ணா விளையாட்டரங்கம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627 002 என்ற முகவரியில் அலுவலக நேரத்தில் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

**<u>பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 3 ஸ்பைரல் பைண்டிங்காக 25.04.2017 –க்குள் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலகம், St. தாமஸ் ரோடு, அண்ணா விளையாட்டரங்கம், பாளையங்கோட்டை – 627 002. என்ற முகவரியில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.</u>**

மேலும் விவரங்களுக்கு 0462–2572632 என்ற அலுவலக எண்ணில் தொடர்புக் கொள்ளவும்.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலவலர் அவர்கள் தெரிவித்தார்கள்.

ஒம்/–
மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலவலர்
திருநெல்வேலி